


# பயங்கர நகரம்!



வாசகர்களே,
64-ம் பக்கத்தை
முதலில் புரட்டுங்கள்!
குதூகலமான
செய்தி ஒன்று
காத்திருக்கிறது!


பயங்கர நகரம்!
நண்பனைக் குரூரமாய் கொலைசெய்திட்ட கொடியவர்களை அழித்தே திருவோமென ஆக்ரோஷமாய்ப் புறப்பட்ட இரு தீரர்களின் சாகசக் கதை இது...



கொலையின் முதற் கட்டம் நடைபெற்றது இலண்டனின் பனிமூட்டமானதொரு தெருவில்... அங்கே கரிய உருவம் ஒன்று, மூச்சிறைக்க ஓடிக்கொண்டிருந்தது— தன் உயிரைப் பாதுகாக்க...
அவனைப் பார்க்க முடியவில்லை! ஆ-ஆனால் இன்னும் என்னைத் துரத்தி வருகிறான்!


சைலன்ஸர் துப்பாக்கியிலிருந்து மறுகணம் புறப்பட்ட தோட்டா ஒன்று, அம்மனிதனின் காதை உரசிச் சென்றது!
டுமீல்!
ஆஆ! காப்பாற்றுங்கள்... உதவி! போலீஸ்...!



உதவிக்கு போலிஸ் வரவில்லை அங்கே. ஆனால் அவலக் குரல் கேட்டு விரைந்து வந்தான் ஒரு நண்பன்...
பியரி! ஹேய் பியரி! என்ன விஷயம்? எதற்காக ஓடுகிறாய்?
ஜானி! என்னைக் காப்பாற்று! ...என்னைக் கொ-கொலை செய்ய வருகிறான்... காப்பாற்று!


கொலையா? உன்னையா
என்ன சொல்கிறாய் நீ?
கெல்ஸ்டர்டுக்கு
வரச் சொன்னான்!
தான் மறந்துவிட்ட
உடனே...
ஹேய், ஆபத்து!
வேகமாகத் திரும்பினான் ஜானி. 'ணங்' என அடி விழுந்தது!
அம்மா!
ஆனால் அந்த ஒரு கணத்தில் ஜானியின் மனத்திரையில் எதிரியின் முகம் பதிந்துவிட்டது...
மறுகணம் அந்த மனித வேட்டை தொடர்ந்தது...
வேகமாய் ஓடிக்கொண்டிருந்த பியரிக்கு தடையாய் தோன்றியது இரயில்வே பாலம் ஒன்று!
வேண்டாம்!
வேண்டாம்! ப்ளீஸ்...
என்னைக் கொல்லாதே...!


பியரியின் கருணை மனு மிருகத்தனமாய் நிராகரிக்கப்பட்டது...சீற்றத்துடன் ஒலித்த துப்பாக்கியின் வேட்டுச் சப்தத்தை, கூச்சலிட்டுக்கொண்டு வந்த இரயில் அமுக்கிவிட்டது!
ஆஆஹ்ற!
சுயநினைவு பெற்ற ஜானி இரயில் பாலத்தை அடைந்த பொழுது எல்லாமே முடிந்துவிட்டது!
...பி-பியரி...என்னை மன்னித்துவிடு! இந்தப் பாவியால் உன்னைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது...! ...ஆனால் அந்தக் கொலைகாரனை எப்படியும் கண்டுபிடித்தே தீருவேன்— நானும்
அதேசமயம், இரண்டு மைல்களுக்கு அப்பால ஐரோப்பாவின் மிகப் பெரிய போக்குவரத்துக் கம்பெனியின் பங்குதாரரான ரோஜர் மும்முரமாக வேலையில் ஈடுபட்டிருந்தார்...
ஜோ, இனி இந்த வண்டி எந்த மக்கர் செய்யாது...!
XU-357
மிஸ்டர் ரோஜர்! உங்களை எங்கெல்லாம் நான் தேடுவது? இங்கேயா வந்திருக்கிறீர்கள்?



சக பார்ட்னரான எட்கார், எப்பொழுதுமே கட்டுப்பாடோடு, 'முதலாளி' என்ற தோரணை விட்டுக்கொடுக்காமல் இருப்பவர். ரோஜர் அதற்கு நேர் எதிரானவர்!
உங்கள் கையெழுத்திற்காகக் காண்டராக்டுகள் பல குவிந்திருக்க, நீங்கள் இங்கே எஞ்சின்களை துடைத்துக்கொண்டிருக்கிறீர்களே!...ஒரு பார்ட்னர் செய்யவேண்டிய வேலையா இது?

எட்காரின் கேள்விக்கு ரோஜர் பதிலளிக்கு முன்னர்—
ரோஜர்! ரோஜர்! நம் பியரியை கொலை செய்து விட்டார்கள்!
எ-என்ன சொல்கிறாய் ஜானி?





பியரியை எதற்காக கொலை செய்ய வேண்டும்?
அதெல்லாம் எனக்குத் தெரியாது! ஆனால் அந்தக் கொலைகாரனை என் கண்ணால் பார்த்தேன்! அவனை நாம் பழிவாங்க வேண்டும் ரோஜர்!


அந்த வெறி நாய் எங்கே இருக்கிறது இப்பொழுது?
மிஸ்டர் ரோஜர், உங்கள் நண்பரின் மரணம் குறித்து வருந்துகிறேன்...ஆனால் உங்களுக்கு முக்கியமான வேலைகள் பல இருப்பதால் இந்த விஷயத்தைப் போலிஸாரிடம் விட்டுவிடுங்களேன்?
மறுகணம், முரட்டுக் கரம் ஒன்று எட்காரின் சட்டையை கவ்விப் பிடித்தது!
இதைவிட முக்கியமான விஷயம் வேறு எதுவும் இருக்கமுடியாது ...பியரி எப்படிப் பட்டவன் என்பது தெரியுமா?...
பியரிக்கும், தோழர்கள் இருவருக்குமிடையே நட்பு வளர்ந்த கதையை விவரித்தான் ரோஜர்...
...இரண்டாம் உலக யுத்தத்தின் பொழுது, கேட்சின் மலையை, சினர்களிடமிருந்து காப்பாற்றுமாறு எங்கள் அணிக்கு உத்தரவிடப்பட்டது ...போரின் முடிவில், நான் ஜானி,பியரி ஆகிய மூவர் மட்டும் உயிரோடு இருந்தோம்...
...காட்டுக் கூச்சல் போட்டுக்கொண்டு இறுதித் தாக்குதலுக்குத் தயாராகின அந்தச் சைத்தான்கள்! அப்பொழுது பியரி தன் பாக்கெட்டிலிருந்து ஒரு சிறு கருவியை எடுத்தான்!
இனிமேலும் நம் மூவரால் தாக்குப் பிடிக்க முடியாது!
கொஞ்சம் பொருங்கள் கர்னல் சார்...அதோ, வெடிக்காது போன பீரங்கிக் குண்டு ஒன்று கிடக்கிறது. அதனுடன் நான் கண்டு பிடித்த இந்தக் கருவியை இணைக்கப் போகிறேன்...


சரமாரியாகப் பொழிந்த தோட்டா மழையை பொருட்படுத்தாமல் பியரி மறைவிடத்திலிருந்து வெளியேறினன்...
ஹேய் பியரி, எங்கே போகிருய்?


"...பியரிக்குப் பித்துப் பிடித்துவிட்டது என்று நானும் ஜானியும் நினைத்தோம். ஆனல் பியரியோ எங்களைவிட சூட்சுமமானவன் என்பது பின்னர்தான் தெரிந்தது!
அவன் செத்துத் தொலையும் முன்னர், காப்பாற்றித் திர வேண்டும்!
தேவையில்லை கர்னல்! இதோ! முடிந்துவிட்டது!


"மறைவைத் தேடி பியரி வந்தபொழுது, மிகவும் பயங்கரமாய் குண்டுகள் பறந்தன"
விஷ்!
என் கருவி மட்டும் வேலை செய்யுமாயின் ...ஆஆ! கர்னல்!


"...நல்லகாலம், சிறு சிராய்ப்போடு பியரி தப்பிவிட்டான். பின்னர் நாங்கள் மூவரும் புறப்பட்டோம்...
ஆஹா! என் கருவி வெற்றிகரமாக செயல்பட்டுவிட்டது!...இதில் விசேஷம் என்னவென்றால், அதனுள் இருக்கும் மின்காந்த அலைகளின் இழுவையால்...
இந்த விளக்கமெல்லாம் எங்களுக்குப் புரியாது பியரி! எங்களுக்குத் தெரிந்தது அடி, உதை, குத்து தான்!
"...பியரியின் அபார எதிர்நாக்குதலால் நிலைகுலைந்துபோன எதிரிகள், சுதாரித்துக்கொள்ள அவகாசம் கிடைக்கவில்லை"
எங்கள் உயிரை காப்பாற்றிய உன்னைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்வதே இனி எங்கள் பொறுப்பு!
இன்று நடந்ததை நாங்கள் ஒருநாளும் மறக்க மாட்டோம் பியரி!
ரோஜரின் பழங்கதை முடிவு பெற்றது.
பியரியைக் கொன்ற வெறியனை மடக்கிப் பிடிப்பதற்கு நானும் ஜானியும் ஏன் இப்படித் துடிக்கிறோம் என்பது இப் பொழுதாவது உங்களுக்குப் புரிந்ததா மிஸ்டர் எட்கார்?...சென்று வருகிறோம்!
TRAI


வெளியே வந்த பின்னரோ...
கொஞ்சம் பொறு ரோஜர்! பியரியைக் கொன்றவன் தப்பி ஓடிவிட்டான்! அவனை எங்கே தேடுவது என்றுகூட நமக்குத் தெரியாது! வேகமாய் புறப்பட்டு விட்டோமே, பழிவாங்க!
வாஸ்தவம் தான்! அவன் முகம் எப்படியிருக்கும் என்பதைத் தவிர வேறு எதுவும் உனக்குத் தெரியாதா ஜானி? ஏதேனும் தடயங்கள்?
ஊஹூம், எதுவுமே கிடையாது!.. ஹேய், பியரி என்னவோ சொன்னானே...ஆ!... கெல்ஸ்டார்டுக்கு போக மறுத்ததாகச் சொன்னான்!
கெல்ஸ்டார்டா? அது எங்கே உள்ளது?...
...வா, உள்ளூர் பத்திரிகை ஆபீஸில் விசாரிப்போம்! சமீபத்தில் பியரி பற்றிய ஒரு கட்டுரை வெளிவந்திருந்தது! அவர்களுக்கு ஏதாவது தெரிந்திருக்கக் கூடும்!
கட்டுரையை எழுதிய நிருபருக்கு பியரியை நன்கு ஞாபகமிருந்தது...
'கெல்ஸ்டார்டு' என்ற பெயர் உங்களுக்குப் பரிச்சயமானதா?
நல்ல, அமைதியான மனிதர்! ஆனால் வெறும் ஆராய்ச்சிகளை மட்டுமே நடத்திக் கொண்டு எப்படித்தான் பிழைத்து வந்தாரோ தெரியவில்லை!...தற்சமயம், பெரியதொரு கண்டுபிடிப்பிற்கு வெகு அருகே வந்துவிட்டதாக சொன்னார்! .. என்னவோ அணுச் சிதறல் சம்பந்தப்பட்டதாம்! எல்லாவற்றையும் கட்டுரையில் போட்டு விட்டேன்!
ஓ, யெஸ்! கெல்ஸ்டார்டு பற்றிக் கேள்விப்பட்டுள்ளேன்! அங்கே யாரும் போனதாகவும் சரித்திரம் கிடையாது! அது ஒரு தனியார் நகரம்! ஆல்ப்ஸ் மலை சிகரத்தில் எங்கோ உள்ளது!
தனியார் நகரமா? அதன் சொந்தக்காரர் யார்?
பையிலிருந்த ஒரு கத்தை புகைப்படங்களை வெளியே எடுத்தார் நிருபர்...
இவர்தான் நகரத்தின் சொந்தக்காரர்! பெயர் ஹிட்லர் பிரபு! உலகின் மிகப்பெரிய பணக்காரர்களில் இவரும் ஒருவர்! கெல்ஸ்டார்டு நகரத்திற்கு அருகாமையிலுள்ள செயற்கைமலை மீது வசிக்கிறார்!
இந்த பயங்கர நகரத்தை யாரேனும் புகைப்படம் பிடித்துள்ளார்களா?



ஓ, உள்ளனவே!... இவற்றைப் பாருங்கள்! ஹிட்லர் பிரபுவின் புகைப் படமும் உள்ளது! பூதக் கண்ணாடியால் பார்த்தால் தெரியும்!
ஆமாம், நெடுஞ்சாலே செல்லும் வழியில் இந்த நகரம் உள்ளபொழுதிலும் இங்கு யாரும் தங்குவது கிடையாதா ?
ஊஹூம்! அந்த ஊர் முழுவதும் ஹிட்லர் பிரபுவின் ஆயுதமேந்திய சிப்பாய்கள் காவல் நிற்பதைப் பார்க்கும் எந்தப் பயணியும் அங்கே தங்க விருப்பப்படுவதில்லை!
ஹேய், ரோஜர்! இதோ அந்த வெறி நாய்! முகத்தில் உள்ள தழும்பு அடையாளம் காட்டுகிறது!
அதோ, இந்த ஹிட்லர் ஆசாமிக்குப் பின்னால் நிற்கிறான்!
வாரே, வா!... ஜானி நாம் உடனே கெல்ஸ்டார்டுக்குப் புறப்படுகிறோம்! ரைட்?


திருபர் திகைத்துப் போனர்!
ஹேய், உங்களுக்கென்ன பைத்தியமா? கெல்ஸ்டார்டுக்குள் உங்களால் நுழையவே முடியாது! ஹிட்லர் பிரபு ரொம்ப பொல்லாதவர்!
அதையும் பார்த்துவிடுவோமே!
அவர் சொல்வதில் தவறு இல்லை! தழும்புத் தடியனைக் கண்டுபிடிப்பதற்கு கெல்ஸ்டார்டில் தங்க வேண்டும்! ஆனுல் காவலர்கள் அதை அனுமதிக்க மாட்டார்களே!
ஜானி, உன்னைப் போல நான் ஒரு புத்திசாலி இல்லை! ஆனுல் எனக்கு டிரக்குகளைப் பற்றி நன்கு தெரியும்... அவற்றை எப்படியெல்லாம் பயன்படுத்துவது என்றும் தெரியும்!
எங்கள் கம்பெனியிலுள்ள மிகப் பெரிய டிரக் ஒன்றை எடுத்துக்கொண்டு நாமிருவரும் டிரைவர் போல நடிக்கப் போகிறேம்!
ஹேய், உன் திட்டம் எனக்குப் புரிகிறது ரோஜர் பையா!... இத்தனை நாளும் உன்னை சரியான எருமைக் கடா என்றுதான் நினைத்திருந்தேன்! ஆனுல் உனக்கும் கொஞ்சம் மூளை உள்ளது என்பது இப்பொழுது தான் தெரிகிறது!
ரோஜரின் பார்ட்னரான எட்கார், தோழர்களின் உற்சாகத்தில் பங்கு கொள்ளவில்லை...
அதி நவீனமான டிரக்கை எடுத்துக்கொண்டு ஒரு வாரம் லீவு என்று சொல்கிறீர்களே, உங்களுக்குப் பித்துப் பிடித்துவிட்டதா?
பித்துப் பிடிக்கவில்லை மிஸ்டர் எட்கார் - வெறி பிடித்துவிட்டது!!... ஆருயிர் நண்பனை தீர்த்துக்கட்டிய கோமாளியை பழிவாங்கும் வெறி பிடித்துவிட்டது!



இராட்சஸ டிரக் சீறிக்கொண்டு கிளம்பியது...
...ஆ-ஆனால், ஒப்பந்தங்கள், கையெழுத்துக்கள்...காண்டிராக்டுகள்...இவற்றையெல்லாம் என்ன செய்வது ?
TIR 159
KEEP CLEAN TRAFFIC EXIT
பார்ட்னர் பதவியிலிருந்து இன்று நான் டிரைவராக உத்தியோகக் குறைப்பு செய்துகொண்டேன்! இதில்உள்ள திருப்தி பார்ட்னர் வேலையில் இல்லை!
நகர எல்லையை கடக்கும் வரை மௌனமாய் இருந்தார். பின்னர்...
ரோஜர், பெரியதொரு நிறுவனத்தின் பார்ட்னரான நீ, எதற்கு வீணாக உன் வேலையை விட்டு விட்டு என்னுடன் வரவேண்டும் ?
DOCKS
ஆஆஹ்! திரும்பத் திரும்பத் அதையே ஞாபகப் படுத்தாதே அப்பனே !
ஜானியின் அடுத்த கேள்விக்கு, ரோஜர் அளித்த பதில் அவரது ஈர உள்ளத்தைக் காட்டியது...
ஆபத்தான வேலையில் இறங்கியுள்ளோம் நாம்! உயிரோடு மீண்டு வருவோமா என்பதே சந்தேகம்!
ஹா! என்றாவது ஒரு நாள் போகப்போகும் இந்த உயிரை நண்பனுக்காக இன்றே கொடுப்பதில் என்ன தவறு?!
இரண்டு நாள் கடிய பயணத்திற்குப் பின்னர், தோழர்கள் இருவரும் ஆல்ப்ஸ் மலைச் சாரல்களின் அற்புத அழகை பார்த்துக்கொண்டிருந்தனர் . ஆனால் அது அல்ல அவர்களது நோக்கம்.. !
ஒரு வழியாக இந்தக் 'குப்பை வண்டியில்' இரண்டு இரவுகளை கழித்தாயிற்று! வரைபடத்தின்படி இந்த இடத்திலிருந்து கெல்ஸ்டார்டு பார்வைக்குத் தென்பட வேண்டும்!...அப்பப்பா உடம்பெல்லாம் வலி!
இன்னும் கொஞ்ச நேரத்தில், இந்த 'குப்பை வண்டி' செய்யப் போகும் சேஷ்டைகளைப் பார்!


அதோ.. கெல்ஸ்டார்டு! எல்லையில் ஹிட்லர் பிரபு பலத்த காவல் போட்டிருக்கிறான்!
அதை இங்கே கொடு... நாம் எதிர்கொள்ளவிருக்கும் காவலர்களை நானும் ஒருமுறை பார்த்துக் கொள்கிறேன்!
நகரினுள் செல்லும் நெடுஞ்சாலையின் முகப்பில் காவலர் மூவர் தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருக்கக் கண்டார் ரோஜர்...
பைனகுலரை சற்றேக் கீழே தாழ்த்திப் பார்வையைச் செலுத்திய அவரது முகம் பிரகாசமானது...
உற்சாகமான காவலர்கள், இல்லையா?
நாம் செய்யப்போகும் காரியம் அவர்களது உற்சாகத்திற்கு உலை வைக்கப்போகிறது பார். முதலில் அந்த அறிவிப்புப் பலகையில் நம் வேலையைக் காட்டுவோம்!
சில நிமிடங்களுக்குப் பின்னர்...
பாதை தவறி வந்துவிட்டோம் என்று நாம் அங்கே கதை விடப்போகிறோம். அந்தத் தவறும், யாரோ விஷமக்காரன் இந்தப் பலகையைத் திருப்பிவைத்ததால்...சரிதானு ஜானி?
இந்தக் கதை நிச்சயமாக அங்கே எடுபடும் ரோஜர்!


பின்னர்...
இதோ முழு வேகத்தில் கிளம்பிவிட்டது வண்டி! இந்த வேகம் வண்டியின் பிரேக் கெட்டுவிட்டது என்று அவர்களை நம்பச் செய்வதற்கான உத்தியே!
அவர்கள் நம்புவது இருக்கட்டும்...இந்த வேகத்திலும் உன்னால் கட்டுப்பாடு நழுவாமல் வண்டியை ஓட்டமுடியும் என்று நான் எப்படி நம்புவது?!


நிறுத்து! நிறுத்து!


காட்டுத் தீயின் விரைவுக்கு ஒப்பான வேகத்தில் கெல்ஸ்டார்டு நகரத் தெருவினுள் புகுந்தது அந்த வண்டி...
விலகி ஓடு...
கட்டுப்பாடிழந்த வண்டி என்பதை இன்னும் தெளிவாகவே உணர்த்துவோம் இவர்களுக்கு!



எதிரே காலி வீடு ஒன்றிருப்பதைக் கவனித்துக்கொண்டார் ரோஜர்...கண்மூடித் திறக்குமுன் வண்டியை லேசாய் ஒடித்துத் திரும்பி, பிரேக்கை வலுவாய் அழுத்தினர்...
ஜானி, தலையைக் குனிந்துகொள்!
டாக்டரைப் பார்க்கவேண்டிய அவசியம் ஏற்படாதிருந்தால் சரிதான்!
சுவரைத் தகர்த்துவிட்டார்களே!
தூசுமண்டலம் கலையுமுன் 'டாஷ்போர்டி'ன் அடியில் கையை கொண்டுபோனர் ரோஜர்...
என் வண்டிகள் அனைத்திலுமே கார் திருட்டைத் தவிப்பதற்கான ரகசிய தடுப்பு அமைப்பு ஒன்று உண்டு. அதனை இப்போது போட்டுவிட்டேன். இனி எந்த மெக்கானிக் வந்தாலும் வண்டியை ஒரு அங்குலம்கூட நகர்த்த முடியாது ...நாமாக...விரும்பினாலொழிய!
என்னைப் பொறுத்தவரை இப்போதைக்கு வண்டி ஆபத்தின்றி நின்றுவிட்டது- மகா சந்தோஷமான சமாச்சாரம்!
விலகி ஓடிய காவலர்கள் திரும்பி வந்தனர்...
எஞ்சின் கோளாறாகி நின்றுவிட்டது!
அப்படியா? ஆனால் இங்கே கெஸ்ட்டார்டில் நீங்கள் தங்க முடியாதே!
அதன் காரணத்தை அறிவதுதானே ரோஜரின் நோக்கம்...
நாங்கள் இங்கே தங்குவதை யாராலும் தடுக்க முடியாது, மிஸ்டர்! வண்டியில் விலை மதிப்பான சரக்கு உள்ளது! எங்கள் முழுப் பொறுப்பில் இருக்கும் இதனை விட்டு நானும் எனது தோழனும் ஒரு அடிகூட நகரமாட்டோம், புரிந்ததா?


இல்லையோ என் உத்தியோகம் போய்விடும்! போன் இருக்குமிடத்தைக் காண்பித்தீர்களே யானால் இங்கிலாந்திலிருக்கும் எனது கம்பெனி யுடன் தொடர்பு கொண்டு, வண்டியைக் கிளப்பத் தேவையான உதிரி பாகத்தை பெற முடியும்.. ஆனால் அதுவரை நாங்கள் இருவரும் இங்கே தங்கித்தான் ஆகவேண்டும்!
...விஷயத்தை உடனுக்குடன் ஹிட்லர் பிரபுவின் காதில் போட்டுவிடுவோம்...அடுத்துச் செய்யவேண்டியதையும் கேட்டுவிடலாம்!
பதைபதைக்கும்நெஞ்சுடன் தலைவரின் பதிலைக் கேட்டறிந்து வேகமாய் தெருவிற்குத் திரும்ப ஓடி வந்தான்...
துப்பாக்கியைக் காட்டி எங்களைப் பயமுறுத்த முடியாது! வண்டியினுள் இருக்கும் சரக்கிற்கு நாங்கள் பொறுப் பாளிகளாதலால் இங்கிருந்து போகமாட்டோம்!
துப்பாக்கிகளை உறையினுள் போடுங்கள்! நம் ஹிட்லர் பிரபு தானே நேரில் வருகிறார் இவர்களைப் பார்க்க!
வஞ்சம் தீர்க்கவந்த மாவீர்கள் இருவரும் முதன்முறையாக மைதாஸ் மலை எனப்படும் அந்தச் செயற்கைச் சிகரத்தின் அமைப்பை மிகுந்த ஆச்சரியத்துடன் பார்த்தனர்...
உலகின் மிகப் பெரும் செல்வந்தன் வசிக்கும் இல்லம் அது ரோஜர்! உண்மையில் அதனை ஒரு கோட்டை என அழைப்பதே பொருத்தம்!
அதோ பிரபு வருகிறார்!



ரோஜர், ஜானி இருவரது கூற்றையும் அமைதியாய் கேட்டான் ஹிட்லர் பிரபு. பின்னர்...
ஓ.கே. நீங்கள் இங்கிலாந்திற்குப் போன் செய்யலாம். இரவில் தங்க என் ஆட்கள் வசதி செய்து தருவார்கள். ஆனால் உங்கள் வண்டியை நாளை மதியத்திற்குள் கிளப்பிக் கொண்டுபோய் விட வேண்டும்!
கவலைவேண்டாம், பிரபு! வண்டியை சீக்கிரமாகவே கிளப்புவதில் குறியாய் இருக்கிறோம்!
பிரபு தன் நவீன சொகுசுக் காரில் ஏறி அமருமுன்...
புதிதாய் பிரச்னைகள் எதுவும் தோன்ற நாம் இடம் தரலாகாது. அதனால் அவர்களது நடவடிக்கைகள் ஒவ்வொரு நிமிடமும் கவனிக்கப்படவேண்டும். இவர்களது கூற்றில் எனக்கு பூரண நம்பிக்கை இல்லை...!
பிரபுவின் காரோட்டியை தற்செயலாகத் திரும்பிப் பார்த்த ஜானியின் ரத்தம் 'ஜிவ்'வெனச் சூடேறியது...
அவனே தான்! அதே தழும்பு அடையாளம்...அருமை பியரியைக் கொன்ற மாபாதகனே தான்!
இரவுப் பொழுதானது. செயற்கை மலை உச்சியிலிருந்து கோட்டை பங்களாவுக்குச் செல்லும் சாலை முழுதும் பிரகாசமான விளக்குகள். அதேசமயம் பிற பகுதிகள் ஒரே இருள்...
தெருக்களில் நடமாட்டம் இல்லை, ஜானி. இரண்டு காவலர்கள் மட்டும் மறைவில் நிற்கின்றனர்!
இனியும் இங்கே முடங்கிக் கிடப்பதில் அர்த்தமில்லை, ரோஜர்.


நாம் இங்கே வந்ததன் நோக்கம் நம் நண்பனைக் கொன்றவனைப் பழிவாங்க... அந்தக் கொடியவன் இருப்பது ஹிட்லர் பிரபுவின் பங்களா என்பதும் தெரிந்துவிட்டது!
ஓ.கே. ரோஜர். நம் நடவக்கையின் இரண்டாவது கட்டத்தைத் துவக்குவோமா?
ஜானி கீழிறங்கி தெருவில் நடக்கலானார்...
ஏய்...நில்!
ஒரு அடி கூட நகரக்கூடாது!
எனது டிரக்கில் மறந்து வைத்துவிட்டு வந்த ஒரு பொருளை எடுப்பதற்காகப் போய்க்கொண்டிருக்கிறேன்...
காவலர்கள் நெருங்கி வந்ததும் இருளிலிருந்து வெளிப்பட்ட ரோஜர்...
ஆ...வ்!
ஹாாாா!
தம் காவல் எல்லையைத் தாண்டிவந்த இந்த அப்பாவிகளுக்கு எதுவும் பிரச்னை ஏற்பட்டுவிடக் கூடாது! அங்கேயே கொண்டுபோய்க் கிடத்திவிடுவோம்!
இவர்களது கை கால்களையும், வாயையும் கட்டிப் போடவேண்டும். இல்லையானால் நினைவு வந்ததும் எல்லோரையும் உஷார் படுத்திவிடுவார்கள்!


அடுத்த சில விநாடிகளில் தம் காரியத்தை முடித்துக் கொண்டு கிளம்பினர் அங்கிருந்து...
இங்கே காவல் நடவடிக்கைகளில் திறமைக் குறைவு காணப்படுகிறது ஜானி. எனவே நமக்கு அதிக இடைஞ்சல் இராது!
கடினமான இடர்ப்பாடுகளின் ஆரம்பமே இனிமேல்தான்!


எவர் கண்ணிலும் படாமல் நகரைவிட்டு வெளியே வந்தனர். இரவு வானில் நெடிதுயர்ந்து நின்ற, மனித முயற்சியில் உருவான அந்த காங்கிரீட் மலையின் அடிவாரத்தை நெருங்கினர்.
கம்பிச் சுருளையும், பற்றுக் கொக்கியையும் கொண்டு வந்திருக்கிறாயல்லவா, ரோஜர்?
தயாராய் இருக்கிறது!


காங்கிரீட் சுவரை ஒட்டிவந்து நின்றனர்...
தொழில் மரியாதையுள்ள எந்தவொரு டிரக் டிரைவரும் எப்போதும் தன் வண்டியில் இந்த கொக்கியையும் கயிற்றையும் மறக்காமல் வைத்திருப்பான்!
சுவரில் வெடிப்புகள் காணப்படுவதால் மேலே ஏறுவது சிரமமாயிருக்காது.


முதல் முயற்சியிலே கச்சிதமாய் மாட்டிக்கொண்டது. கொக்கி...
எதிர்பார்ப்பு ஏமாற்றத்தைத் தரும் என்று இப்போது நான் சொன்னால் அது உன் காதில் ஏறாது!
மேலே பார், நான் சொன்னபடி எல்லாமே இலகுவாய்த் தானிருக்கிறது!
முதலில் ரோஜர் மேலே ஏறத் தொடங்கினார்...
நடப்பவை எல்லாமே சிக்கலின்றிச் செல்கிறது என்றால் நமக்கு உதவும் அந்த அதிர்ஷ்டம் எவ்வளவு நேரத்திற்கு நீடிக்கும்என்பதை உறுதி சொல்ல முடியாது!
அது உண்மைதான், என்பது கெல்ஸ்டார்டு நகரின் எல்லையில் நிரூபணமாகியது...
காலி வண்டி! உள்ளே விலைமதிப்பற்ற அரிய சரக்கு இருப்பதாக நம்மிடம் கூறினார்களே!
அதற்காகவே தான் தாங்கள் இங்கே தங்க வேண்டியதிருப்பதாகவும் சொன்னார்களே! இப்போது இதற்கு என்ன விளக்கம் சொல்கிறார்களெனப் பார்ப்போம்...


அங்கே அவர்களது அறைக்குச் சென்றபோது...
அறை காலியாயிருக்கிறது! எங்கே போய்விட்டார்கள்?
நகர் முழுதும் தேடுங்கள்! நான் உடனே பிரபுவின் பங்களாவிற்குத் தகவல் தெரிவிக்கிறேன்!
காவலனின் பதற்றம் நிறைந்த போன் செய்தியைக் கேட்ட மனிதனோ வெகு அமைதியாக...
உன் திறமைக் குறைவுக்கு கட்டாயம் தண்டனை உண்டு. அந்த பிரிட்டிஷ்காரர்களைப் பற்றி பீதி கொள்ளத் தேவையில்லை. அவர்களது வருகையை இங்கே எதிர்பார்த்துத் தயாராயிருக்கிறோம்!
கர்னல் கார்க்... எ-எப்படி. உங்களால் அதை யூகிக்க முடிந்தது?
உன்னைப்போல் நானும் முட்டாளாக இல்லாதது ஒரு காரணம்! மேலும் அவர்களில் ஒருவனை ஆரம்பத்திலேயே அடையாளம் தெரிந்து கொள்ள முடிந்தது ...என்றால்!
...பின் ஏன் அவர்களை பிரபு தங்க அனுமதித்தாரென்று கேட்கிறாயா? அவர்கள் இங்கே வந்ததன் நோக்கம் அறிய விரும்புகிறோம்! அவர்களை எதிர்கொள்ளும் ஆயத்த நிலையில் இருக்கிறோம்!
சுவரின் சிறு இடுக்குகளில் விரல்களால்பற்றி மிகஉயரத்தில் தொற்றி நின்றனர்...மேலும்சிலதடவை பற்றுக்கொக்கியின் உதவியால்,இறுதியாக உச்சித் தளத்தை வந்தடைந்தனர்...
ஏதோ ஒரு பேரபாயத்தை நோக்கி நாம் போய்க்கொண்டிருக்கிறோம் என்று என் உள்மனது தொடர்ந்து கூறிவருகிறது ஜானி...
நீ ஒரு பிறவி அச்சக்காரன், ரோஜர்!


உள்ளே திடீரெனப் பிரகாசித்த எதிர்பாராத ஒளிவெள்ளம் அவர்களைத் திக்குமுக்காட வைத்தது...
ஏ-என்ன இது..?
எந்திரங்கள்! இயங்குவதற்கு அடையாளமாக ரீங்காரஒலி கேட்கிறது! அவை நம்மை நெருங்குவதில் நேசபாவம் தெரியவில்லை!
அதை ஆமோதிக்கும் விதமாக ஒரு எந்திரத்திலிருந்து ஏதோ வாயு அவர்களை நோக்கிப் பீச்சியடிக்கப்பட்டது...
அஹ்ஹ்!!
ரோஜர்! இந்தப் பக்கம் வா!
நண்பர்கள் இருவரும் மறைவான மூலை ஒன்றினை நோக்கிப் பாய்ந்தனர்...
த்சு! தலை சுற்றுகிறது! ஜானி, இது ஏதோ ஒரு மயக்க வாயு!
நம்மையே குறியாய்க் கொண்டு நெருங்கிவருகின்றன! உடனடியாக ஏதாவது செய்தாகவேண்டும்...
சடாரென தன் கையிலிருந்த கொக்கியினை விசிறிஎறிந்தார்-
ஒரு எந்திரத்தில் மாட்டிக்கொண்டது! ரோஜர், கம்பினைப் பிடித்து இழு...


ரோஜரின் அளவிடற்கரிய வலு எதிர்பார்த்த பயனைத் தந்தது...
கீழே சாய்த்துவிட்டோம்!
அதோ பார்... இவற்றைத் தொடர்ந்து மேலும் சில வருகின்றன! வா, வாசல் வழியே வெளியேற முயற்சிப்போம்!
வாசலை நோக்கி ஓடினர்...
ஹிட்லர் பிரபு நம் வருகையை எதிர்பார்த்து இந்த எந்திர வரவேற்புக் கமிட்டியை தயார் நிலையில் வைத்திருக்கிறான்!
திக்குமுக்காட வைக்கும் வரவேற்பாகவல்லவா இருக்கிறது!
ஆனால் அவர்களது அதிர்ஷ்டம் கடைசிநேரத்தில் கைவிட்டுவிட்டது...
கதவு மூடிக்கொண்டதே..!
ரோஜர்! குனிந்துகொள்... இன்னொன்று வருகிறது.. அஹ்!


ஹிட்லர் பிரபுவும், கர்னல் கார்க் என்றழைக்கப்படும் அந்தத் தழும்புக்காரனும், ஊடுருவல்காரர்கள் இருவரும் மயங்கி தரையில் சரிவதை மறைவில் நின்று கவனித்தவாறிருந்தனர்...
பாராட்டுகிறேன், கர்னல். அந்த எந்திரங்களை திறம்பட இயக்கி எதிரிகளை வீழ்த்திவிட்டாய்!
உள்ளே இழுத்துவாருங்கள்! தனித்தனியே இருவரையும் மின்பலகைகளில் சேர்த்துக் கட்டுங்கள்!
நண்பர்கள் இருவருக்கும் ஏறக்குறைய ஒரே சமயத்தில் நினைவு திரும்பியது ...
பயில்வான்கள் என்று நீ கூறியதும் சரிதான்... இதோ நம்முடன் மோத சரியான ஜதை!
பல பயில்வான்களுடன் குஸ்தி போட்டு ஜெயித்து விடலாம். ஆனால் இந்த மயக்க வாயு தாக்குப் பிடிப்பது அசாத்தியமான காரியம்!
பியரி? ஓ.. ஆம்! அது ஒரு துரதிர்ஷ்டவசமான நிகழ்ச்சி.. ஆனால் மிகவும் அவசியமானதும்கூட! இங்கே எனது மைதாஸ் மலையில் ஏற்கனவே வெற்றிகரமாக உருவாக்கியிருக்கும் ஓர் அரிய விஞ்ஞானக் கண்டுபிடிப்பை அவனும் தனது கற்றுக்குட்டித்தனமான ஆராய்ச்சியில் கண்டுபிடித்துத் தொலைத்துவிட்டான்..
..அவனை இங்கே அழைத்து வந்து எந்த அளவுக்கு அவன் இந்த ஆராய்ச்சியில வெற்றிகண்டிருக்கிறான் என்பதை அறிய விரும்பினேன். இங்கே வர அவன மறுத்ததால் கர்னலுக்கு அவன் கதையை முடிப்பதைத் தவிர்த்து வேறு வழி புலப்படவில்லை...
இட்போது எங்களுக்குத் தெரியவேண்டிய விஷயம்- நீங்கள் என்ன காரணத்திற்காக இங்கே வந்தீர்கள் என்பதுதான்?



பிரபு தலையயசைத்து சைகை செய்ய, கர்னல் கார்க் அருகேயிருந்த சுவிட்ச் பலகையை நெருங்கினான்.
ஒரு மரணமுற்ற நண்பனுக்காக உங்கள் உயிரைப் பணயம் வைத்து வந்தீர்களா? இதைவிடச் சிறந்ததொரு கதையையல்லவா உங்களிடம் நான் எதிர் பார்த்தேன்! எனக்கு உண்மை தெரிய வேண்டும்! கர்னல்...
ஹிட்லர் பிரபு, நாங்கள் யார் என்பதைச் சொல்லிவிடுகிறோம்! பியரின் உயிருக்குயிரான நண்பர்கள்... அவனது மரணத்திற்குக் காரணமான கொலைபாதகனைப் பழிவாங்கப் பிரதிக்ஞை எடுத்து வந்தவர்கள்!
கர்னல் சுவிட்ச் ஒன்றைத் திருக, ஒரே நேரத்தில் ஆயிரம் வெந்தழல் கத்தி முனைகள் தம் முதுகில் ஊடுருவினாற் போன்ற உணர்வில் ஓலக்குரல் எழுப்பினர் இருவரும்...
ஆஆஆஆ!
ஓஓஓ!!
மறுவிநாடி திரும்பவும் உணர்விழந்து தலைதொங்கினர்...
இன்னொரு முறையும் மின்சாரத்தைப் பாய்ச்சு, கர்னல். வோல்டேஜைக் கூட்டிக்கொள்!
உங்கள் உத்தரவுப்படியே, பிரபு!
குளிர்ந்த நீர், இரண்டாவது பரிட்சார்த்த சோதனைக்கு திரும்பவும் அவர்களைத் தயார்ப்படுத்தியது!
நீங்கள் வேதனையின் முழு அர்த்தத்தையும் உணரப் போவது இப்போதுதான்! அதற்கு முன்னதாக நீங்கள்...
மன்னியுங்கள், பிரபு! நமது பிரத்யேக அலை வரிசையில் செய்தி ஒன்று வருவதாக ரேடியோ சுமிக்ஞை ஒலி எழுப்புகிறது!


மைதாஸ் மலையின் ஏகபோகச் சக்கரவர்த்தி யான ஹில்டர் பிரபுவின் கண்களில் வெற்றி ஒளிச் சிதறலாய் மின்னியது...
கேட்டாயா கார்க்? பிரத்யேக அலைவரிசை யிலிருந்து செய்தி! எனது விதி முறைகளை ஒத்துக்கொள்ளத் தயாராகி விட்டனர் போலும்! இவர்கள் சிறிதுநேரம் இதே நிலையில் இருக்கட்டும்... இப்போதைக்கு நமக்கு வியாபாரம்தான் முக்கியம்!
ரோஜரும், ஜானியும் அறையினுள் தனித்து விடப்பட்டவுடன்...
கொரிய தேசப் பழமொழி ஞாபகத்திற்கு வந்து விட்டதா 'மரணத்தை நீ முன்ன தாக அறிய நேருவாயானல், முயன்று நீ ஏன் வீர புருஷனைய் மடியக்கூடாது? ஆனல செயலில் அது எளிதில்லை என்பதுதானே உண்மை?
எனக்கு வேறொரு பழமொழி ஞாபகத்திற்கு வருகிறது! 'மடியும் மாவீரர் கள் மாற்றுக்குறைந்தவர்கள்' ஆகவே முடிந்தால் சாகா திருக்கவே முயலுவேன்! இந்த மின்பலகையை... சிறிது நகற்ற... உப்!
ரோஜரின் புருவ ஓரங்களில் வியர்வை முத்திட்டது, அவரது புஜ நரம்புகள் புடைத்து முறுக்கேறக் கண்டார் ஜானி...
ம்... விடாதே, ரோஜர்! நகர ஆரம்பிக்கிறது!
ரோஜர் தன் உடலை வருத்திய சில நிமிடங்களின் பலனைய்...
சாதித்து விட்டாய்! என் கைக்கு எட்டி விட்டது கொக்கி!
சீக்கிரம், ஜானி! அந்தக் கொடியவர்கள் எந்த நிமிடமும் திரும்பலாம்!



இருவரும் விடுதலைபெற்று வெளியேற ஆயத்தமானவேளையில்...
ஹே! இருவரும் கைக்கட்டுகளை விடுவித்து விட்டார்களே...!
ரோஜர்! வீழ்த்துவோம் அவர்களை!
மின்னலெனப் பாய்ந்து, தம் இடித்தாக்குதலால் காவலர்களை தரைசாய்த்தனர் இருவரும்...
ஏய்... அஹ்ஹ்!
எந்திரத் துப்பாக்கியை எடுத்துக்கொள், ரோஜர். அத்தோடு இவர்கள் வைத்திருக்கும் வாயு கவசமும் நமக்குப் பயன்படும்... ஒரு வேளை திரும்பவும் அவர்கள் அந்த நச்சுவாயு எந்திரங்களை நம்மீது ஏவலாமில்லையா...
மீண்டும் நாம் சுதந்திரமாய் நடமாட முடிந்ததில் என்னே ஆனந்தம் நாம் இங்கே அடுத்து செல்ல வேண்டிய பகுதி எது?


அறை ஒன்றினுள் நுழைந்த அவர்களின் எதிரே வியப்பில் வாயடைக்கச் செய்யும் பிரமிக்கத்தக்க காட்சி...
என்ன கருவி இது?
கம்யூட்டர்! பிரம்மாண்டமான எந்திர மூளை என்றும் கூறலாம்! இதனை உருவாக்க பலகோடி டாலர் செலவு பிடித்திருக்கும்!



சுவரோடு பொருத்தப்பட்டிருக்கும் பொத்தான் அமைப்பு ஒன்றினைக் கடந்து தாங்கள் உள்ளே நுழைந்திருக்கிறோம் என்பதை அவர்கள் இருவரும் உணரவில்லை...
இந்த ராட்சதக் கருவியால் யாருக்கு என்ன பயன்?
உனக்குப் புரியவில்லையா, ரோஜர்? ஹிட்லர் பிரபு தான் ஒரு ஆச்சரியமான அறிவியல் கண்டு பிடிப்பினை எட்டியிருப்பதாகச் சொன்னானில்லையா... அந்தக் கண்டுபிடிப்பிற்கு உரியவன் அவனல்ல..இந்தக் கம்ப்யூட்டரே!
அதே சமயம் மற்றொரு அறையில்...
கம்ப்யூட்டர் அறையின் கண்காணிப்பு அமைப்பு யாரோ உள்ளே நுழைந் திருப்பதாகக் காட்டுகிறது!
ஜானி நாம் இங்கே வந்ததன் குறிக்கோளைக் காட்டிலும் அதன் பின்னணி ரகசியம் பெரிது... இன்னும் சொல்லப்போனால் பியரியின் கொலைச்சம்பவத்தை விட மிகப்பெரிது!
இந்த 'எந்திரமூளை' ஹிட்லர் பிரபுவுக்கு கணித்துத் தந்தி ருக்கும் அறிவியல் கண்டுபிடிப்பு எதுவாயிருந்தாலும் நிச்சயம் அது ஒரு அறிவியல் விந்தையே! ஆனால் அது என்ன?... அதன் பயன்தான் என்ன?
கேள்விக்குப் பதில் வெறுப்புத் தொனியில் வந்தது கொலைகாரன் கார்க்கிடமிருந்து...
அதன் பயன் அழிவு.... பேரழிவு! ம்... நகராதீர்கள்!
அழிவிற்கான கண்டு பிடிப்பே அற்புத விசைக் கதிர்... எந்த ஒரு பொருளின் மூலக் கூறு அமைப்பினையும் தகர்த்து சிதறச் செய்யும் ஆற்றல் கொண்டது!


கம்யூட்டர் வெற்றிகரமாக உருவாக்கியிருக்கும் அரிய விஞ்ஞானக் கண்டுபிடிப்பை அவனும் தனது கற்றுக்குட்டித்தனமான ஆராய்ச்சியில் கண்டுபிடித்துத் தொலைத்துவிட்டான்..
நான் துப்பாக்கியைப் பயன் படுத்த எண்ணி குறிபார்க்கும் முன்பாகவே அவன் என்னைச் சுட்டு விடுவான்! ஆனால் இன்னொரு இலக்கு இருக்கிறது...!
தன் புஜ அசைவின்றியே விசையைத் தட்டினார் ஜானி...
....அதுதான்! இந்தக் கம்ப்யூட்டர்!
ஏ..ஏய்..என்ன செய்கிறாய்?
எதிர்பாராத அச்சம்பவத்தால் அதிர்ந்துநின்ற கொலைகாரன் திரும்பவும் சுயநினைவு பெறும் முன்பாக
எல்லாவற்றையுமே கெடுத்துவிட்... அஹ்ஹ்ஹ்!
கார்க்கின் துப்பாக்கி தெறித்து கீழே விழ, அவன் மேல் பாய்ந்தார் ஜானி...
எங்கள் பழி நடவடிக்கையில் முதல் பலி கம்ப்யூட்டர்!


நீதியை நிலைநாட்டப் புறப்பட்ட உயிர்த் தோழனுக்கும் நேர்மையற்ற, கொடியவனான கொலைகாரனுக்கும் மூண்டது யுத்தம் அங்கே இரண்டு பக்கமும் இரக்கம் என்பது கடுகளவும் காட்டப்படவில்லை...
சூளுரைக்கிறேன்., இப்போது! பியரியே உன் கொலைவெறிக்குப் பலியான கடைசி நபர் இனி உனக்கு மீண்டும் அதற்கான வாய்ப்பு... கிட்டவே கிட்டாது!




ஆவேசத் தாக்குதலின் விளைவால் கண்ணாடி ஜன்னல் வந்து மோத ..
உன் கொடுஞ் செயலுக்கு... இன்றோடு... முற்றுப்புள்ளி!
ஜானி...!
ஆஆஆஆஆ!!
மின்னல் வேகத்தில் ரோஜர் பாய்ந்து பற்றியதால் தன் வைரியோடு சேர்ந்து பரிதாப மரணத்திற்காளாகாமல் தப்பினார் ஜானி...
கம்ப்யூட்டர் இரைச்சலிடுகிறது,... வெடித்துச் சிதறப்போகிறது!
எக்கேடும் கெட்டுப் போகட்டும்! நாம் விரைந்து கிளம்புவோம் இங்கிருந்து! வெளியே ஹிட்லர் பிரபுவின் காரினைப் பார்த்ததாக ஞாபகம்...!
அடுத்த சில விநாடிகளில்...
எப்படி இந்த வண்டியை உன்னால் கிளப்ப முடிந்தது ரோஜர்? போர்டில் எஞ்சினை முடுக்கும் சாவியை நான் பார்க்கவில்லையே!
UX 5763
பானட்டில் அடியில் நான் என்ன செய்தேனென்று நினைத்தாய்? எஞ்சினைப் பற்றி நன்கு தெரிந்தவனுக்கு சாவி அவசியமில்லையே!
ஹேே!


கோட்டைக்கான அந்தச் சாலையின் முகப்பில் திடுக்கிட்டு நின்ற காவலர்களுக்கு வருவது பிரபுவின் கார் என்று மட்டுமே அடையாளம் காணமுடிந்தது ஆனால் நிகழப்போவதை உணராத நிலையில் எதிர்த்தாக்குதலுக்கு வாய்ப்பற்றவர்களாயினர்
வண்டியினுள் இருப்பது... அஹ்ஹ்!
கெல்ஸ்டாக்கு நகர ரோந்துப் படையினர் அரண்மனைக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். பயணத்தைத் தொடர முடியாமல் ஜானியின் துப்பாக்கிக்கு இரையாகினர் அனைவரும்!!!
காரிலிருந்து இறங்கி தம் டிரக்கை நோக்கி ஓடினர். ஜானி காவலர்களைச் சுட்டுக் கொண்டிருக்க டிரைவர் ஆசனத்தில் பாய்ந்து அமர்ந்தார் ரோஜர்...
ய்யாாா! இதோ ஸ்டார்ட் ஆகி விட்டது எஞ்சின்!
வண்டியைக் கிளப்ப முடியாதவாறு தடுப்பு அமைப்பு விசை ஒன்றினைப் போட்டு வைத்திருந்த ரோஜர் அதனை நீக்க, எஞ்சின் உறுமலுடன் கிளம்பியது..
நான் முன்பே சொன்னேனில்லையா ஜானி.,. இவர்கள் காவலுக்கு லாயக்கற்ற கற்றுக்குட்டிகள்! ஸ்டியரிங் அல்லது முக்கியமான கருவியினைக் கழற்றி வைத்திருந்தார்களானுல் நாம் இப்படித் தப்பிக்க வழியில்லாது போயிருக்குமல்லவா..
அப்படிச் சொல்லாதே, ரோஜர்! இதற்குமுன்னதாக ஒரு தடவை சொல்லி என்ன நடந்ததென்பது உனக்கு ஞாபகமிலலையா?!




நகரை விட்டுக் கிளம்பியது அவர்களது வண்டி...
ஹே! ஏதோ ஒரு வகையான வாகனம் மலைபபாதைவழியே அரண்மனையிலிருந்து வந்து கொணடிருக்கிறதே! வேகமோ கண்மூடித்தனமாயிருக்கிறது!
துப்பாக்கிக் கார்
இம்முறை தப்பவேதப்பாது!
சுடு!
திரும்பு!



மறுகணம், கண்ணைப் பறிக்கும் ஒளிக்கற்றையொன்று டிரக்கின் வெகு அருகே சீறிப் பாய்ந்தது...சாலையின் வலது பக்கம் நின்ற வலுவான குடிசை அதன் இலக்காயிற்று...
ஆண்டவனே! அணுக்குலைப்புக் கருவியல்லவா இது? இதைப் பற்றித் தான் அந்தத் தழும்புத் தடியன் சொல்லிக் கொண்டிருந்தான்!


ஊம், சுடு!



ரோஜரின் திறமையான கைகள், டிரக்கை, கொடிய கதிரின் பாதையிலிருந்து விலக்கின...
ஜானி, கொஞ்சம் இப்படி வந்து, வண்டியை நீ ஓட்டு! நம் நண்பர் ஹிட்லர் பிரபுவை சமாளிப்பதற்கு ஒரு வழி உள்ளது!
ஒரு கனத்த சுத்தியலை எடுத்துக்கொண்டு, டிரக்கிலிருந்து வெளிப்பட்டான் ரோஜர்...
இப்படியும் அப்படியுமாக வண்டியை ஓட்டு ஜானி! சீரான பாதையில் சென்றோமானால், சற்று நேரத்தில் பஸ்பமாகிவிடுவோம்!
தேர்ந்த சர்க்கஸ் வித்தையாளனைப் போல் ரோஜர் செயல்பட்டான்...
இறுகப் பற்றிக் கொள் ரோஜர்! வளைவு வருகிறது எதிரே!
டிரக் வளைவில் திரும்பயிருப்பதைக் கண்ட ஹிட்லர் பிரபுவின் முகத்தில் ஒரு மலர்ச்சி ஏற்பட்டது...
வேகத்தைக் குறை டிரைவர்! வளைவில் திரும்பும்பொழுது அவர்களது டிரக் நம் பார்வையில் சரியாக விழும்! அச்சமயம் அவர்களை லேசாகச் சுட்டுவிடலாம்!
ஆனால் ஹிட்லர் பிரபுவின் இந்த யுக்தியை எதிர்பார்த்திருந்த ரோஜரோ செயலில் இறங்கினார்...
போய் வா, என் கண்ணே!


தம்மை நோக்கி அசுரவேகத்தில் வந்துகொண்டிருந்த வாகனத்தைப் பார்த்தவுடன் பீதியில் அலறினுர் ஹிட்லர் பிரபு!
சுடு! அந்த வண்டியை பஸ்பமாக்கு! அதனை தகர்த்தெறி மடையா!



பயத்தில் கை கால் நடுங்க,அந்த சிப்பாய் ஹிட்லர் பிரபுவின் ஆணையை நிறைவேற்றினுன்! ஆனுல்...
ஐயையோ, நாம் தொலைந்தோம்!
விலகாதே டிரைவர்! இதோ நான் சுடப்போகிறேன்...


மறுகணம்—
ஆஆஆஹ்!



சில நொடிகளுக்கு, பின்னிப் பிணைந்த அந்த இரு வாகனங்களும் பள்ளத்தாக்கை நோக்கி உருண்டோடிச் சென்றன. - பின்னர்...
வவ்! எல்லாமே க்ளோஸ்!
அதே சமயம், மைதாஸ் மலையும் தீப்பற்றி எரிந்துகொண்டிருந்தது...
அப்பாடி! இனி கம்ப்யூட்டரும் கிடையாது! ஹிட்லர் பிரபுவும் கிடையாது! இந்த அணுக்குலைப்புக் கருவியும் ஒழிந்தது!
தழும்புத் தடியனும் தொலைந்தான்!... வெற்றிகரமாக முடிந்துவிட்டது!
இனித் தொல்லை- என் பார்ட்னர் எட்காருக்கு விளக்கம் சொல்லவேண்டும்! அவர் என்ன சொல்வார் என்பது எனக்குத் தெரியும்!
ஹூம், கஷ்டம் தான் ரோஜர்!
அன்று மாலை, கணக்கற்ற நெளிசல்கள் சகிதமாக, டிரக்கின் முன்பகுதி மட்டும் வந்து சேர்ந்தது. ரோஜரின் பார்ட்னர் வசைமாறி பொழிய ஆரம்பித்தார்!
இந்தக் கன்றாவியை நான் எங்கு சொல்வது? ஒரு பெரிய நிறுவனத்தின் பார்ட்னர் இப்படியா பொறுப்பில்லாமல் நடப்பது! சே! நீங்களெல்லாம் டிரைவர் வேலைக்குத்தான் லாயக்கு! முதலாளியாக இருப்பதற்கல்ல!
நான் அப்பொழுதே சொன்னேனல்லவா ஜானி!




லயன் காமிக்ஸ் சார்பாக வெளியிடுபவரும், ஆசிரியரும்: S. விஜயன்.
வெளியீடு எண்: 9. முகவரி: லயன் காமிக்ஸ், தபால் பெட்டி எண் 55,
சிவகாசி - 626 123. ☎போன் : 649.
அச்சிட்டோர் : ஸ்ரீ சேகர் ஆப்செட் பிரஸ், சிவகாசி.



விச்சு & கிச்சு
டெனிஸ் கிளப்
கிச்சுவைக் காணுமே! மேட்சிற்கு நேரமாகிவிட்டது!
ஹா, இதோ வந்து விட்டேன் விச்சுப் பையா! புதுமையான சர்வீஸ் முறையொன்றைப் பழகிக் கொண்டிருந்ததால் நேரமாகிவிட்டதைக் கவனிக்கவில்லை! இன்று பார் ஐயாவின் ஆட்டத்தை!
ஃபவுல்!
திரும்பவும் கோட்டைத் தாண்டி விட்டீர்கள்! ஸ்கோர் லவ்- பதினைந்து!
சர்வீஸ் போடும் பொழுது, கால்களை கோட்டுக்குள் கொண்டு வராதே கிச்சு!
லவ் முப்பது!


பந்து வெளியே போய்விட்டது! லவ் நாற்பது!
கொஞ்சம் நிதானமாய்ப் போடு கிச்சு! இந்தப் பாயிண்டை கோட்டை விட்டால் தொலைந்தோம்!
கவலைப்படாதே! ஐயாவின் ''தோட்டா'' சர்வீஸ் இம்முறை தப்பவே தப்பாது!
ஆஹா, அபாரம் கிச்சு!
உன் பக்கமாய் வருகிறது! ஓங்கி அடி கிச்சு!
கேம்!
அடபபாவமே, கிசசு மூர்ச்சையாகிவிட்டான்!
அசதி!


கபிஷ்
முயல் மோத்து உணவருந்தும் வேளைகளில் அதன் கவனம் திசை திரும்புவதில்லை. தற்போதோ ஸீகலின் வருகையைக்கூட அது உணரவில்லை.
வாழ்வின் மகத்தான சந்தோஷமே உணவருந்துவதில் தான் இருக்கிறது.
அகப்பட்டுக் கொண்டாய்.
?!
உதவி! உதவி!
தொந்தரவற்ற அமைதியான இடம் ஒன்றை நாடிச் சென்று.. ஓ, கூடாது!
நாசமாய் போகிற பீடைச் சனியன் வந்துவிட்டதே. முயல் இருப்பது தெரிந்தால் பறித்துச் சென்று விடுமே.
ஹலோ ஸீகல், பைக்குள் என்ன கொண்டு செல்கிறாய்?
அது.. வந்து... உள்ளே இருப்பது... என் தமக்கை மகன்.
உன்னுடைய தமக்கை மகனா? ஆனால் அவன் குரல் முயலின் குரல் போல் ஒலிக்கிறதே!
அதனால்தான் இந்தப் பைக்குள் போட்டிருக்கிறேன்.
உதவி!
அவன் ஒரு விநோதமான நோய்க்கு ஆளாகி விட்டான்.. அதாவது திடீரென முயலாய் மாறிவிட்டான்.
அடக் கடவுளே!
என் பாட்டி சொல்கிறாள் இந்த நோயைக் குணமாக்க ஒரே வழி இப்படி பைக்குள் போட்டுச் சுற்றித் திரிவதுதானாம்.


பாவமாயிருக் கிறது!
ஆம்... இவன் மேல் நான் உயிரையே வைத்திருக்கிறேன்.
என்ன விஷயம், ஸீகல்? எதற்காக அழுகிறாய்?
அந்தப் பைக்குள் என்ன வைத்திருக்கிறாய் சொல்லு?
வ...வந்து...
பீலுவிடம் சொன்ன கதை கபிஷிடம் பலிக்காது.
உள்ளே இருப்பது ஸீகலின் மருமகப் பையன்.
மருமகனா? எதற்காக அவனை பைக்குள் போட்டிருக்கிறாய்?
அவள்... வந்து...
பீலுவிடம் சொன்னதைச் சொன்னால் கபிஷ் சிரித்துவிடும்.
முயலாக மாறிவிட்டானாம்... குணப்படுத்துவதற்கான ஒரே வழி பைக்குள் போட்டுத் திரிவதுதானாம்.
உன் மருமகன் முயலாய் மாறி விட்டானா?
ஆ.. ஆமாம்.
பீலு, பேசாமல வாயை மூடிக் கொண்டிரு.
ஸீகல் ஏதோ நாடகமாடுகிறது.
?!


இந்த ராஸ்கல் நம்மை ஏமாற்றப் பார்க்கிறான். உள்ளே இருப்பது உண்மையான முயலாகத்தானிருக்கும்... பெரும்பாலும் மோத்துவாகத் தானிருக்கும்.
முயலாக மாறும் நரிகளை குணப்படுத்தும் வழி ஒன்று எனக்குத் தெரியும்.
நோய்வாய்ப்பட்ட நரியை பைக்குள் போட்டு வேர்களால் மூடவேண்டும்.
அப்புறம் நான் அறிந்து வைத்திருக்கும் மந்திரம் ஒன்றை உச்சரிப்பதற்காக நெருங்கிய உறவினர் ஒருவர் மட்டும் தங்கியிருக்க மற்றவர்களெல்லாம் சென்றுவிட வேண்டும்.
எல்லோரும் சென்று விட்டால் நானும் முயலும்தானே இருப்போம்... சபாஷ்!
உன் மருத்துவ முறை நல்லதாகப் படுகிறது, கபீஷ். முயற்சித்துப் பார்ப்போம்!
இந்த வேர்களைக் கொண்டு முதலில் உன் பையை மூடுவோம், நீ உச்சரிக்க வேண்டிய மந்திரத்தையும் சொல்லித் தருகிறேன்.
ஹோ, கபீஷ். என் மேல் விழுகிறதே!
சாரி. இந்த வேர்களை ஒன்றோடு ஒன்று இணைத்து மெதுவாக கீழே விடுகிறேன்.
வேர்களை நீண்ட கயிறாக இணைத்து கீழே விட்டது.
இதோ!
இந்த மருத்துவ முறையை நன்றாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். என் உறவினர் யாரேனும் இதே நோய்க்கு ஆளானால் உதவலாமல்லவா.



பீலு, நீ போய்விடு.
ஆமாம், ஆமாம்.
கட்டாயம் போக வேண்டுமா? நானும் உடன் இருந்து பார்க்க விரும்புகிறேன்.
நீ போய்த்தான் ஆக வேண்டும். கபீஷ் சொன்னதைக் கேட்கவில்லையா?
நெருங்கிய உறவினர் ஒருவர்தான் இங்கே இருக்க வேண்டும்.
பீலுவை அங்கிருந்து அனுப்புவதிலேயே கவனமாயிருந்தது ஸீகல். கபீஷ் வேருக்குப் பதிலாக தன் வாலை வளர்த்துக் கீழே அனுப்பியதை அது கவனிக்கவில்லை.
சரி, சரி, போகிறேன்.
நன்றி பீலு, நன்றி!
கபீஷும் இங்கிருந்து போனதும் நமக்கு இன்று சரியான விருந்து.
எல்லையில்லா மகிழ்ச்சியுடன் திரும்பிப் பார்த்த ஸீகல் பெரும் அதிர்ச்சிக்குள்ளானது. கபீஷின் வால் நுனியில் பை மேலே சென்று கொண்டிருந்தது.
ஹே!
போய்விடு, இங்கிருந்து. இல்லையென்றால் பீலுவிடம் உன் மோசடியை அம்பலப் படுத்தி விடுவேன்.
ஏமாற்றி விட்டாய் என்னை. முயலை ஒப்படைத்து விடு என்னிடம். இல்லையென்றால்... நான்...நான்...
574
நன்றாயிருக்கிறாயல்லவா, மோத்து?
ஓ...யெஸ். நன்றாயிருக்கிறேன் கபீஷ். என் உயிரைக் காப்பாற்றியதற்கு நன்றி.
முற்றும்.


அடுத்த வெளியீடு!
ஸ்பைடர் தோன்றும்
கடத்தல்
குமிழிகள்!
லயன்
காமிக்ஸ்
ரூ-2/-
பாக்கெட் சைஸ்!

விரைவில் வெளிவருகிறது!


மாடஸ்டி பிளைஸி தோன்றும்

# மரணக் கோட்டை!

லயன் காமிக்ஸ்








விசித்திர விஞ்ஞானி!
கட்டியான இந்த ஒளிக்கதிர், தன் பாதையிலுள்ள எந்தப் பொருளேயும அறுத்துத் தள்ளிவிடும்! இனி கதிரின் வீரியத்தை, நடமாடும் பொருட்கள் மீது பய்ன் படுத்திப் பார்க்க வேண்டியதுதான்!
புரபஸர் ஸ்டாஸ்கி ஒரு குடாக்குப் பேர்வழி! ''விஞ்ஞானிகள் கழகத்தில்'' தானும் ஒரு உறுப்பினராய் சேரவேண்டுமென்பது அவரது நெடுநாளேய அவா! ஆனல் கழகமோ அவரை நிராகரித்துவிட்டது! இதனுல் மனக்கசப்பு அடைந்து, நியூயார்க்கின் ஒதுக்குப்புறத்தில் குடியேறி, பயங்கரமானதொரு கருவியை உருவாக்கிக் கொண்டிருந்தார் அவர்.
அதே சமயம், ஒரு மைல் தொலேவில் விக்டரும், தாம்சனும், தமது இயந்திரத் தோழன் ஆர்ச்சியுடன் பயணமாகிக் கொண்டிருந்தனர்!
நாம் தவருன பாதையில் செல்கிறேம் என்று நினேக்கிறேன் விக்டர்.
ஆல் ரைட்! ஆர்ச்சிக்கு காரை திருப்பச் சொல்லி உத்தரவு கொடுக்கிறேன்!
பாழடைந்த வீட்டினுள்ளோ புரபஸர் ஸ்டாஸ்கி, தனது கதிர்த் துப்பாக்கியை சரிசெய்துகொண்டிருந்தார்...
ஆஹா! என்து காமா கதிர்த் துப்பாக்கிக்கு சரியான இலக்கு! கதிர் இயக்கத்தை X 43க்கு அதிகரிக்கப் போகிறேன்!
மறுகணம்—
ஹேய், என்ன இது?
இராட்சஸ டார்ச்சை யாரோ போட்டுவிட்டது போலுள்ளதே!
வவ்! கார் பாதியாக வெட்டப்பட்டு விட்டது!!


உதவி!
ஆஆஆஹ்!
பதருதீர்கள் தோழர்களே!
காயமின்றி தப்பித்தனர் விக்டரும், தாம்சனும்...
என்ன நடந்தது விக்டர்? "பளீர்" என்ற ஒளிவந்தது... மறுகணம் ஆளுக்குப் பாதியாக கார் துண்டாகிவிட்டதே?!
ஒளிக் கற்றை வந்தது அந்த வீட்டிலிருந்துதான்! அங்கே போய் என்ன நடக்கிறது என்று பார்க்கலாம்!
தனது சோதனையை முடித்துவிட்ட திருப்தியில், புரபஸர் ஸ்டாஸ்கி, கிளம்பிக்கொண்டிருந்தார்...
ஹேய், யாரது? அவனை விடாதே ஆர்ச்சி... துரத்திப் பிடி!
ஹெ! ஹெ! ஹெ! இந்த சின்ன டப்பா நியயார்க் நகரத்தையே என் வசம் ஆக்க உதவப் போகிறது!
ஓஹோ! இயந்திர மனிதனா? என் காமா கதிருக்கு மற்றுமொரு சோதனைதான்!
ஆர்ச்சி, குப்புற விழு!
ஆர்ச்சி, தரையைத் தொட்ட அதே நேரத்தில், பயங்கரக் கதிர்வீச்சு பாய்ந்து சென்று, அங்கே நின்ற மரங்களை அறுத்துத் தள்ளியது!
தாம்ஸன், மரம் நம் மேல் விழப்போகிறது!
ஆர்ச்சி, எங்களைக் காப்பாற்று!
விக்டரின் திறமையான இயக்கத்திற்குப் பணிந்து, இரும்பு மனிதன் ஓடோடி வந்தான்!
ஊம், சீக்கிரம் ஆர்ச்சி!



மரங்கள், தோழர்களை நசுக்கவிருந்த கணத்தில், சூப்பர்மேன் போலப் பாய்ந்து, மரங்களின் முழுக் கனத்தையும் தாங்கிக்கொண்டது ஆர்ச்சி...
ஆஹா! ஆர்ச்சியால் தான் இன்று பிழைத்தோம்!
ஆர்ச்சியை நம்பினோர் கைவிடப்படார்!
ஹேய், கதிர் துப்பாக்கியுடன் அந்தக் கிறுக்கன் ஓடிவிட்டான்! நியூயார்க் திசையில் செல்கிறான்!
வா, அவனைப் பின்தொடரலாம்!
நம் கார் இரண்டு துண்டாகிவிட்டது என்பதை மறந்துவிட்டாயா தாம்சன்? இதை இனி ஓட்ட முடியாது!
நம்மால் முடியாது - ஆனால் ஆர்ச்சியால் முடியும்!
அரை மணி நேரத்திற்குப் பின், நியூயார்க் நெடுஞ்சாலையில், ஒரு விசித்திர ஊர்வலம் நடைபெற்றுக்கொண்டிருந்தது!
அங்கே பார் வேடிக்கையை!
ARCHI
எல்லாம் வெயில் செய்கிற வேலை! பசங்களுக்கு மறை கழன்றுவிடுகிறது!
போலீஸ் ரோந்துக் கார் வழி மறித்தது ..
இந்த புது மாடல் ரிக்ஷாவில் எங்கே வேகமாய் கிளம்பி விட்டீர்கள்?
காமா கதிர் வீச்சின் பயங்கரத்திலிருந்து நகரத்தையே காப்பாற்றுவதற்காக விரைந்து கொண்டிருக்கிறோம் ஆஃபீஸர்!
நடந்த விஷயங்களை சுருக்கமாக தெரிவித்தனர் தோழர்கள்...
கேட்பதற்கு விசித்திரமாக இருந்தாலும் இதிலும் ஏதேனும் விஷயம் இருக்குமோ?
நமக்கேன் வம்பு? காப்டனிடம் அழைத்துச் செல்வோம்!
ஆமாம், ஸ்டாஸ்கி என்ற கிறுக்கு அந்த பாழடைந்த வீட்டில் வசிப்பது கேள்விப்பட்டிருக்கிறேன்!
அந்தக் கிறுக்கனின் கையில்தான் இந்த கொடிய கதிர் சிக்கியுள்ளது கேப்டன்! உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்!


என்ன செய்யலாம் கேப்டன்? அவனை ஒரே அமுக்காக அமுக்கிவிடலாமா?
அவனை எங்கே தேடுவது? ...மேலும் இவர்கள் சொல்லும் கதையை நம்ப முடிய...
திடீரென கேப்டன் வாயடைத்துப்போனார்...
ஹேய், எ-என் கார்!
வெயிலில் வைக்கப்பட்ட வெண்ணெய்யைப் போல என் கார் உருகுகிறது!
கண்ணைப் பறிக்கும் ஒளிக் கீற்று...! இவர்கள் சொன்னது நிஜம் தான்!
இப்பொழுது வரை, பரீட்சித்து மட்டுமே பார்த்துக்கொண்டிருக்கிறார் புரபஸர்! விரைவில் கதிரை அழிவுக்கு அவர் பயன்படுத்தக்கூடும்!
நகரத்தையே காலியாக்க என்னால் ஏற்பாடு செய்யமுடியும்! ஆனால் அதற்குள் காரியம் கைமிஞ்சிப் போய்விடுமே?!
கதிர்வீச்சு எழுந்த கோணத்தை வைத்துக் கணக்கிட்டால், புரபஸர் ஸ்டாஸ்கி, கடற்கரையை ஒட்டியதொரு இடத்தில் இப்பொழுது இருக்கவேண்டும்!
வாருங்கள், கட்டிடத்தின் மேல்தளத்திலிருந்து பார்வையிடுவோம்!
மேல் மாடியில்...
அதோ, புரபஸர் ஸ்டாஸ்கி!! லிபர்ட்டி சிலையின் தீபத்தின் மீது பதுங்கியிருக்கிறார்!
ஓ. கே, லெட்டினண்ட், கடலோரப் பாதுகாப்புப் படையினருடன் சென்று சிலையை சூழ்ந்து நில்லுங்கள்!
உங்கள் ஆட்களின் உயிரை பணயம் வைக்கவேண்டாம்.. ஆர்ச்சியும், நாங்கள் இருவரும் கவனித்துக்கொள்கிறோம்!
ஆல்ரைட்! உடனடியாக செயல்படுங்கள்! எந்த நேரத்திலும் அந்தக் கிறுக்கன், நியூயார்க் நகரையே கொளுத்தி விடக்கூடும்!



பதினைந்து நிமிடங்களுக்குப் பின்னர், லிபர்ட்டி தீவில் இறங்கினர் மூவரும்!
இதுவரை காமா-கதிரை நம் மீது ஸ்டாஸ்கி பயன்படுத்தாதது ஏனோ ?
அவரது கருவியில் பழுது ஏற்பட்டிருக்கக்கூடும் என்பது ஆர்ச்சியின் கணிப்பு!
ஆர்ச்சி சரியாகவே கணித்திருந்தது! புரபஸர் ஸ்டாஸ்கி கடைசி நிமிட மாற்றங்களை வேகமாக செய்துகொண்டிருந்தார்...
ஒருவழியாக முடிந்தது! இனி நியூயார்க்கின் வானளாவிய கட்டிடங்களை கொளுத்தப்போகிறேன்!
ஏணிப் படிகள் வழியாகச் சென்று மடக்குவோம்...
அதற்கெல்லாம் இப்பொழுது நேரமில்லை! சிலை மீதாகவே ஆர்ச்சி நொடிப்பொழுதில் ஏறிவிடும்!
சில நிமிடங்களுக்குப் பின்...
ஆர்ச்சியை தயார் நிலையில் வைத்திரு விக்டர்! சிறு தவறு ஏற்பட்டாலும் மூவரும் தொலைந்தோம்!
பயப்படாதே தாம்சன்! ஆர்ச்சி மீது எனக்கு முழு நம்பிக்கை உள்ளது!
திடீரென, மூவரையும் கண்டு திகைத்துப் போனார் அந்த விசித்திர விஞ்ஞானி!
ஓ, இரும்பு மனிதனும், அவனது நண்பர்களும் அன்று சாகவில்லையா ? இன்று ஒழித்துவிடலாம்!
சற்றும் எதிர்பாராத விதத்தில், ஆர்ச்சி கயிற்றுச் சுருளை புரபஸர் மீது வீசியது!
ஆ ஆ ஆ ஹ்! எ-என் கருவி! பாழாக்கிவிட்டாய் கோட்டானே!


ஆங்காரத்தில் துடித்த புரபஸர் தன் கதிர்த் துப்பாக்கியை சுமந்துகொண்டு கீழே பாய்ந்தார்...
என் கருவியின் இரகசியம் என்னோடு அழியட்டும்!
ARCHI
ஆனால் எதிர்பாராத ஒரு திருப்பம்!
ஈஈஈஈ...! காப்பாற்றுங்கள்!
அடி சக்கை! சிலையின் கிரீடத்தில் சிக்கிக் கொண்டார் புரபஸர்! அவரை மீட்டி வா ஆர்ச்சி!
ஓ. கே!
ஆ, அப்படித்தான்! மெல்ல கீழிறங்கு... அவரை போலீஸிடம் ஒப்படைப்போம்!
சுயநினைவற்று, பயத்தில் மூர்ச்சையாகிப்போன புரபஸரிடம் - தரையை தொட்ட பின்னர் ஒரு பெரிய மாறுதல் தெரிந்தது...!
எ-என் தலை சுற்றுகிறதே! கெட்ட சொப்பனத்திலிருந்து எழுந்தது போல உள்ளது ... இந்த இடத்தில் எனக்கென்ன வேலை?
ஆ, யெஸ்! காமா-கதிர்!— எனக்கு ஞாபகம் வருகிறது! தயவுசெய்து கதிர்-துப்பாக்கி, தீயவர்களிடம் சிக்கி விடாமல் பார்த்துக்கொள்ளுங்கள்!
சிலையின் கிரீடத்தில் தொங்கிக் கொண்டிருந்த அதிர்ச்சியில், புரபஸருக்கு சித்தம் தெளிந்துவிட்டது! இனி பிரச்னை இருக்காது;
மறுநாள் காலை, நியூயார்க் மக்கள் வழக்கம்போல் தத்தம் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தனர்— தங்களுக்கு ஏற்படவிருந்த ஆபத்தை உணராமல்! அப்பொழுது...
வாழ்த்துக்கள் புரபஸர்! உங்களை 'விஞ்ஞானிகள் கழகத்தில்' முக்கிய உறுப்பினராய் தேர்ந்தெடுத்துள்ளனர்!
ஆஹா! ரொம்ப சந்தோஷம்! ஆனால் முதலில் இந்த லிபர்ட்டி சிலையை சுற்றிப் பார்த்துவிட்டுத்தான் மறுவேலை! இதற்கு முன்னர் அதைப் பார்த்ததே கிடையாது!
லிபர்ட்டி சிலையையா? வேண்டவே வேண்டாம்! ஆர்ச்சி உங்களை பத்திரமாக வீட்டுக்குக் கூட்டிச் செல்லும்!
ஆமாம், ஆமாம்! உயரமான இடத்திற்குச் சென்றால் உங்கள் தலை சுற்றக்கூடும்!
ஓ.கே, ஓ.கே, உங்கள் இரும்பு மனிதனோடு வாக்குவாதம் செய்யமுடியாது என்றால்! என்னை கீழே விடுங்கள்!
முற்றும்.


கம்ப்யூட்டர்
இமய மலைச் சாரல்களின் நிழலில் அமைதியாக வாழ்ந்துவந்த அந்த கிராமத்திற்கு பெயர் ஹூலி. பரம்பரையாக அங்கு ஆட்சி நடத்தி வந்த ராஜ குடும்பம் தன் சொத்துக்களையெல்லாம் இழந்து, பிரஜைகளைப் போலவே ஏழ்மையில் சிக்கித் தவித்தது.
ஹூலியின் பழம் செல்வச் செழிப்பிற்கு சாட்சியாகத் தங்கி நின்றது, நாகதெய்வத்தின் வைரக் கண்கள் தான்!
இந்நூற்றுண்டின் துவக்கத்தின்போது, வைரத்தைத் திருட முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டது...
ஹா! இந்த வைரத்தை எடுத்துக்கொண்டு இங்கிலாந்திற்கு ஓடிவிடலாம்! பின்னர் ஆயுள் முழுதும் நான் கோடீஸ்வரன தான்!
பேராசை தந்த வேகத்தில், தொட்டியினுள் குதித்தான் அந்த ஆங்கிலேயன். அதனுள் தயாராக இருந்த காவலர்களை அவன் பார்க்கவில்லை!
ஆ ஆ ஆஹ்!
உதவி! காப்பாற்றுங்கள்...!!



உதவிக்கு அங்கு எவரும் வரவில்லை. கைகளில் சக்தியிருந்தவரை, தூணை பற்றித் தொங்கிக் கொண்டிருந்தான் அந்தத் திருடன். அதன் பின்னரோ...
ஈஈஈ...ஆ ஆ ஆஹ்!
இரண்டு வருடங்கள் உருண்டு ஓடின. ஹூலி கிராமத்தை கடும் பஞ்சம் பிடித்து உலுக்கியது. ராஜாவோ செய்வதறியாது திகைத்து நின்றார்...
ஆதரவு நாடி வரும் மக்களுக்கு என்னால் எப்படி உதவமுடியும் மந்திரியாரே? அயல்நாடுகளிலிருந்து உணவு இறக்குமதி செய்ய என்னிடம் பணம் இல்லையே!
நல்ல மழை பெய்தால் நெல் அறுவடை பன்மடங்கு அதிகரிக்க வாய்ப்புள்ளது அரசே! அதுவரையில் தாக்குப்பிடிக்க மட்டும் உணவு கிடைத்தால் போதுமானது!
வைரக் கண் படைத்த நாகதெய்வத்தை தினந்தோறும் வணங்கினர் ஏழை மக்கள்.
அவர்கள் பிரார்த்தனைக்கு ஒரு நாள் பலன் கிடைத்தது! மழைகாலம் வரும் வரை தேவையான உணப்பொருட்களை சுமந்துகொண்டு ஒரு டிரக் ஊர்வலம் ஹூலியினுள் நுழைந்தது! அது ஒரு அஞமதேயப் பரோபகாரியின் அன்பளிப்பு!
சில காலத்திற்குப் பின்னர், நாக தெய்வத்தை வழிபட்டுவந்த மக்களுக்கு ஒரு கொடிய அதிர்ச்சி ஏற்பட்டது!
நாகதேவரின் கண்கள்! கண்களைப் பாருங்கள்!
அவற்றைக் காணவில்லையே!
காட்டுத் தீ போலப் பரவிய செய்தி ராஜாவை எட்டியது...
பிரபோ, நான் உடனடியாக இங்கிலாந்திலுள்ள அற்புத துப்பறிவாளர் ஜானியை சந்தித்து வைரக் கண்களை மீட்பது பற்றி அறிந்து வருகிறேன்!
அப்படியே செய்யுங்கள் அமைச்சரே!
ஆக அமைச்சர் நம்பர் 13 மார்வல் தெருவிற்கு வந்து ஜானியை சந்தித்தார்.
தாங்கள் தான் டோனி சாஹிபா?
ஆமாம்! உள்ளே வாருங்கள் மந்திரி! உங்கள் கடிதம் நேற்று கிடைத்தது.
ஜானியின் மாபெரும் மின்னணு அமைப்பைக் கண்டு மந்திரி பிரமித்துப்போனார். ஜானியின் முதல் செய்தி, அவரை மேலும் வியப்பில் ஆழ்த்தியது!
ந-நம்ப முடியவில்லையே!
ஏற்கனவே உங்களுக்காக ஒரு செய்தி தயாராக உள்ளது சார்!
வணக்கங்கள்! வைரக் கண்களை நான் கண்டுபிடித்துத் தருகிறேன் ...எல்லா விபரங்களையும் - எதையும் விடாமல் சொல்லுங்கள்!




மந்திரி கொடுத்த விளக்கம் : "தொடர்ந்து மூன்று நாட்களுக்கு ஹூலி கிராமத்து மக்கள், தமது இழப்பை எண்ணி அழுது புலம்பினர்..."
"மூன்றாவது நாள் இரவு, அரசரின் அரண்மனை ஜன்னல் வழியாக ஒரு கல் பறந்து வந்தது"
"கல்லுடன் ஒரு செய்தியும் வந்திருந்தது"
"ஐந்து லட்சம் ரூபாயைக் கொடுத்தாலொழிய, நாக தெய்வத்தின் கண்களை நீங்கள் இனி பார்க்க முடியாது!"
"அந்த பயங்கர செய்தி வந்தபொழுது நானும் போலீஸ் தலைமையதிகாரி காலின்ஸ்ஸும் அரசருடன் இருந்தோம்."
பணத்தைக் கொடுக்கப் போகிறீர்களா அரசே?
அதெப்படி சாத்தியப்படும் கேப்டன்?
என்னிடமோ, பிரஜைகளிடமோ வசதி கிடையாது என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே!
"ஆனால் விசித்திரமானதொரு நிகழ்ச்சி நடைபெற்றது. மிரட்டல் கடிதத்தைப் பற்றி மக்கள் அறிந்ததும், நாக தெய்வத்தின் சிலையடியில் அனைவரும் ஆளுக்கு ஒரு ரூபாய் வீதம் காணிக்கை செலுத்தினர்..."


ஐந்து லட்சம் ரூபாய் நாணயங்கள்! நோட்டுக்களாய் மாற்றி அதன் நம்பர் வரிசையை குறித்துவைத்து, திருடனை அமுக்குவது சுலபம்!
ஆமாம், யாரிடம் கொடுப்பது பணத்தை?
"அன்று ராஜாவிற்கு பிரிதொரு செய்தி வந்தது."
சரியாக நள்ளிரவுக்கு, கேப்டன் காலின்ஸ் ஐந்து லட்ச ரூபாய்களை, ஹூலி நதிப் பாலத்தின் மையத்தில் வைத்துச் செல்ல வேண்டும்!"
"அதன்படி, கேப்டன் காலின்ஸ், ஐந்து இலட்சம் ரூபாய்களை பாலத்தில் மையத்தில் வைத்தார். அங்கே அவருக்காக ஒரு சிறு பொட்டலம் காத்திருந்தது.
திருட்டுப் பசங்கள் தம் வார்த்தையைக் காப்பாற்றிவிட்டது போல் தெரிகிறது!
"ராஜாவும், நானும் அரண்மனையில் ஆவலுடன் காத்திருந்தோம்."
வைரக் கண்கள் கிடைத்தனவா கேப்டன்?
இல்லை அரசே!
பொட்டலத்திற்குள் இருந்தது இந்தக் கற்கள் தான்! இவை போலிகள் என்பதை சிறு குழந்தை கூடக் கண்டுபிடித்துவிடும்!
மந்திரி தன் கதையை முடித்தார்...
கேப்டன் சொன்னது போல் அவை போலிக் கற்களே! எமதுமக்கள் தங்களிடமிருந்த கடைசிக் காசையும் இழந்து நிற்கின்றனர் இப்போது!
சே! அநியாயமாய் இருக்கிறதே! ஜானி என்ன சொல்கிறது என்று பார்ப்போம்!
கோபாவேசத்தில் வேகமாய் இயங்கியது ஜானி! பின்னர் அதிலிருந்து வெளிப்பட்ட செய்தி இருவரையும் திடுக்கிடச் செய்தது...!
என்ன நினைக்கிறீர்கள் மந்திரியாரே?
ஆண்டவனே!
இதைக் கேட்டு நான் ஆச்சரியப்பட வில்லை. திரும்பக் கொடுக்கப்பட்ட வைரங்கள் போலியாகவேயிருக்கும் என்று நான் எதிர்பார்த்துவிட்டேன்! டோனி-நீ ஹூலிக்கு நேரில்சென்று நான் சொல்வதைச் செய்!


ஆக, அற்புதத் துப்பறியும் கம்ப்யூட்டரின் ஆணைக்குப் படிந்து டோனி ஹூலிக்குப் புறப்பட்டான்...
இயற்கை எழில் கொஞ்சுகிறது மந்திரியாரே!
ஹூம், இருந்த கடைசிப் பணத்தையும் கயவர்களிடம் கோட்டைவிட்ட பின்னர் நாங்களெல்லாம் இயற்கையை எங்கே ரசிப்பது ?
ஹூலிக்குச் டோனியை கண்ணில்லாநாக தெய்வத்தைப் பார்வையிடச் செய்தனர்...
இராஜ நாகங்கள் சதா விழிப்புடன் இருக்க, திருடனால் எப்படி வைரக் கண்களை கைப்பற்ற முடிந்தது என்றுதான எனக்குப் புரியவில்லை!
இந்தப் புதிருக்கு, இரண்டு விளக்கங்கள் கொடுத்துள் ளது ஜானி! பின்னர் சொல்கிறேன்!
அரண்மனைக்கு வந்தவுடன், இராஜா, கேப்டன் ஆகியோரிடம் டோனி சில கேள்விகள் கேட்டான்...
மலையேறும் பயிற்சி பெற்றவர் யாரேனும் ஹூலியில் உள்ளனரா என்பது முதலில் தெரிய வேண்டும் பிரபோ!
ஏன், நிறைய மலைகளில் ஏறிய அனுபவம் எனக்கு உண்டே ?!
இரண்டாவதாக சீக்கிரத்தில் கெட்டுவிடக்கூடிய உணவுப் பொருட்களை இறக்குமதி செய்யும் நபர் யாரேனும் 'ஹூலியில் உள்ளனரா?
ஆமாம், கோமஸ் என்ற ஒரு ஆசாமி உள்ளான்! அவனிடம் குளிர்பதன வசதி உண்டு!
கோமஸ்
அவன் எப்படிப்பட்டவன், மிஸ்டர் காலின்ஸ்?
ஹூம், கொஞ்சம் தில்லுமுல்லான பேர்வழி தான்! கடத்தல் கும்பல் ஒன்றுடன் அவனுக்குத் தொடர்புஇருக்கலாம் ...ஆனால் எதுவும் நிருபணமாகவில்லை!




டோனி சற்று நேரத்தில் கோம்ஸ் மீது வீசிய குற்றச்சாட்டு அனைவரையும் திடுக்கிட வைத்தது!
நாகப் பாம்புகளை ஏமாற்றி, வைரங்களை நீ எப்படித் திருடினாய் என்பது தெரியும் கோம்ஸ்! கட்டியான கார்பன் டை ஆக்ஸைடை உபயோகித்தீர்கள், இல்லையா?
எ - எப்படி உனக்குத் தெரியும் ?!
அதிர்ச்சியுற்ற கோம்ஸால் மறுக்கக்கூட முடியவில்லை...
அது என்னது கட்டியான கார்பன் ஆக்ஸைட் ?
காய்ந்த ஐஸ் கேப்டன்! எளிதாகச் சுமந்து செல்ல முடியும்- விரைவில் உஷ்ண நிலையைக் குறைக்கக் கூடியது!...
பாம்புகளுக்கு சுத்தமாய் குளிர் பிடிக்காது. கட்டியான காய்ந்த ஐஸை கூடைகூடையாய் பாம்புத் தொட்டியில் கோம்ஸும், கூட்டாளியும் கொட்டியவுடன் பாம்புகள் மறைவைத்தேடி ஓடிவிட்டன!...
...பின்னர் பள்ளத்தினுள் இறங்கி, வைரங்களை இருவரும் திருடிவிட்டனர்! காலையில் ஐஸ் கரைந்து ஆவியாகிவிட்டது! - எப்படி திட்டம் ?
இதோ நீங்கள் கொடுத்த ஐந்து இலட்சம்! நாங்கள் திருடிய வைரத்தைத் தான் திருப்பித் தந்து விட்டோமே, எங்களை விட்டுவிடுங்கள்!
புளுகாதே! வைரங்கள் போலிகள்!
கேப்டன்! உங்களது கேள்விகளை சற்று நிறுத்துகிறீர்களா? அரசருடன் ஒரு விஷயம் பேசவேண்டியுள்ளது!
அரண்மனைக்குள் நுழைந்தவுடன், டோனி விசித்திரமானதொரு கேள்வியைப் போட்டான்!
தான் திருடிய வைரத்தை அப்படியே திருப்பித் தந்துவிட்டதாய் கோம்ஸ் சொன்னான்! அவன் சொன்னது உண்மை தானே பிரபோ ?
"உண்மை" நம் இருவருக்கு மட்டுமே தெரிந்திருக்கட்டும் மிஸ்டர் டோனி!
நிஜ வைரங்களை எடுத்துவிட்டு, அந்த இடத்தில் போலிகளை வைத்தது நான் தான்! இரண்டு வருடத்திற்கு முன்பு, பஞ்சத்தால் மக்கள் செத்து வந்தபோது, உணவு இறக்குமதி செய்வதற்காக வைரங்களை நான் இரகசியமாய் விற்றுவிட்டேன்!
ஜானி இதையே தான் சொல்லியிருந்தது!... எப்படி எடுத்தீர்கள் என்பதும் தெரியும்!
ஆமாம், அனுபவம் வாய்ந்த மலையேறும் வீரர்களைப்போல தூணுக்கும் மரத்துக்குமிடையே கயிறு கட்டித் தான் நான் வைரங்களை அடைந்தேன்!
கோம்ஸிடமிருந்து பெற்ற ஐந்து லட்சத்தை இனி மக்களிடமே திருப்பிக் கொடுத்து விடலாம்! போலி வைரங்களை நாகதெய்வத்திற்குப் பொருத்திவிடுவதன்மூலம் மக்கள் திருப்தியடைவர்! 2 ஆண்டுக்கு முன் இருந்த வைரத்திற்கும் இதற்கும் வித்தியாசம் கண்டுபிடிக்க முடியாது!
அது இரகசியமாகவே இருக்கட்டும் பிரபோ!
நானும், ஜானியும் இதுபற்றி மூச்சு விடமாட்டோம்!
டோனி நம்பர் 13 மார்வல் தெருவிற்குத் திரும்பியவுடன் ஜானி உற்சாகமாய் வரவேற்றது.
வருக! வருக! கேஸை மிகச் சிறந்த முறையில் தீர்த்தமைக்கு பாராட்டுக்கள்! என் பெயரைக் காப்பாற்றிவிட்டாய்!


GORDON

# லயன் காமிக்ஸ்
பெருமையுடன் வழங்கும்
## கோடை ஸ்பெஷல்
# மீண்டும் C.I.D லாரன்ஸ்




# தமிழ்ப் புத்தாண்டு அன்று வருகிறது!




அ.கொ.தீ.க.வின்
சதித்திட்டத்தை
முறியடிக்கும்
சாகஸம்!





லயன் காமிக்ஸ்




பயங்கர
நகரம்
லயன்
காமிக்ஸ்